**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 68/2024 - PW-11**

| | |
|---|---|
| Name | திரு.காண்டிபன் |
| Husband/Father Name | கோவிந்தராஜ் |
| Village /Area | மகேந்திரவாடி |
| Taluk | நெமிலி |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 36 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 23.02.2026.

**(எதிரிகள் 2 முதல் 5 வரை ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 16.12.2021ம் தேதி இரவு 11 மணி அளவில் நான் வேலைக்கு சென்று வீட்டுக்கு திரும்பி கொண்டிருந்த போது சக்திவேல் என்பவர் JCB வாகனத்தை ஓட்டி சிறுவளையம் கிராமத்தை நோக்கி சென்று கொண்டிருந்ததாகவும் அருள், தினேஷ், கலையரசன், சதீஷ், நந்தகுமார் ஆகியோர் JCB வாகனத்தை சிறுவளையம் கிராமத்தில் வழிமறித்து JCB வாகனத்தின் கண்ணாடியை கற்களால் அடித்து ஒடைத்தனர். JCB யிலிருந்த சக்திவேல் என்பவரை அருள் என்பவர் கத்தியால் இடது தலையின் மீது வெட்டினார். சதீஷ், நந்தகுமார் ஆகியோர் சக்திவேலை கற்களால் அடித்தனர். செந்தில்குமார் என்பவர் சண்டையை விளக்கும் போது உன்னையும் வெட்டிவிடுவேன் என்று மிரட்டியதால் அவர் பயந்து கொண்டு நின்று விட்டார். பிறகு கூச்சல் போட்டவுடன் அவர்கள் அனைவரும் ஓடி விட்டனர். பிறகு செந்தில்குமார் என்பவர் காயம்பட்ட சக்திவேலை 108ல் ஏற்றி கொண்டு வாலாஜா அரசு மருத்துவமனைக்கு சென்றார். அங்கு முதல் சிகிச்சை பெற்றுக்கொண்டு அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். மறுநாள் 17.12.2021 அன்று காலை சக்திவேல் இறந்து விட்டதாக கேள்வி பட்டேன். இது சம்மந்தமாக நெமிலி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் இறந்த சக்திவேலின் மாமா. என்னை போலீசார் சம்பவ

தினத்தன்று காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். நான் கொடுத்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் இட்டேனா என்றால் ஆமாம். 17ம் தேதி சக்திவேல் இறந்த விவரம் செந்தில்குமார் கூறி தான் எனக்கு தெரியும். செந்தில்குமார் தான் சம்பவம் பற்றி என்னிடம் கூறினார். செந்தில்குமார் கூறாமல் இருந்து இருந்தால் சம்பவத்தை பற்றி எனக்கு தெரிந்து இருக்காது என்றால் ஆமாம். இறந்தவர் எனது மைத்துனர் என்பதால் நான் அவருக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.23 19:21:50 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.